# 8

# ஒரு கிறிஸ்தவரின் வேலை பற்றிய விவரிப்பு

## (பிலிப்பியர் 2:12-18)

நமக்குப் பொறுப்புக் கொடுக்கப்படும்போது, நம்மில் பெரும்பான்மையானவர்கள், வேலை பற்றிய விவரிப்பைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறோம். மிகச்சரியாக நாம் *எதைச்* செய்ய வேண்டும் மற்றும் அதை *எவ்வாறு* செய்ய வேண்டும் என்று அறிந்துகொள்ள நாம் விரும்புகிறோம். புதிய ஏற்பாட்டில் பல வசனப்பகுதிகள் கிறிஸ்தவரின் "வேலை பற்றிய விவரிப்பின்" பகுதி என்ற வகையில் நினைக்கப்படலாம். சில வசனங்கள், நாம் என்ன செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பவற்றைக் குறித்து அக்கறைகொள்பவைகளாக உள்ளன. இவைகள் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் - மற்றவர்களுக்கு உதவுதல் மற்றும் தேவனை ஆராதித்தல் போன்ற - பொதுவான நிபந்தனைகளை வெளிப்படுத்துகின்றன. நாம் நமது தாலந்துகளையும் வாய்ப்புக்களையும் - நமது எஜமானருக்கு ஊழியம் செய்வதற்கு நமக்கே உரித்தான தனிச்சிறப்புள்ள வழிகளைக் கண்டறிய - பயன்படுத்தும்படியும் அறைகூவல் விடுக்கின்றன. மற்ற பகுதிகள், நாம் எவ்வாறு நமது பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என்பதன்மீது கவனம் குவிக்கின்றன. பிலிப்பியர் 2:12-18 அப்படிப்பட்ட ஒரு வசனப்பகுதியாக உள்ளது. உலகப்பிரகாரமான வேலை பற்றிய விவரிப்புகள் *செய்முறைகளை* விவரிக்கின்றன, ஆனால் கிறிஸ்தவரின் வேலைபற்றிய இந்த விவரிப்பு *சிந்தையின் மீது* - கர்த்தருக்கு நாம் ஊழியம் செய்கையில் நாம் கொண்டிருக்க வேண்டிய எண்ணப்போக்கின் மீது - கவனம் குவிக்கிறது.

## வேண்டிக் கேட்கப்பட்ட வேலை (2:12அ, ஆ)

### கீழ்ப்படிய வேண்டிய அவசியம்

12ம் வசனத்தில் பவுல், 1:27ல் தொடங்கிய நடைமுறை அறிவுறுத்துதலை மீண்டும் தொடர்ந்தார். அவ்வாறு செய்கையில் அவர், 2:8ல் இருந்து கீழ்ப்படிதலின் சிந்தனையைத் தேர்ந்து எடுத்தார்: இயேசு, "மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் *கீழ்ப்படிந்தவராகி*, தம்மைத்தாமே தாழ்த்தினார்." (என்னால் வலியுறுத்தப்படுகிறது.) இப்போது பிலிப்பியருக்குப் பவுல், "ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் *கீழ்ப்படிகிறபடியே,* நான் உங்களுக்குச் சமீபமாக இருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும்" என்று கூறினார் (வசனம் 12அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). 12ம் வசனம், "ஆதலால்" என்று தொடங்குகிறது, இது பின் தொடரும் கருத்தை முன்சென்ற கருத்துடன்

பிணைக்கிறது. இயேசு கீழ்ப்படிந்திருந்தார்; ''ஆதலால்'' அவர்களும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். இந்த புத்திமதி உறுதியான கட்டளையாக அல்ல, ஆனால் அன்பான ஒரு உடன்படிக்கையாகத் தரப்பட்டது: அவர்களைப் பவுல், "எனக்குப் பிரியமானவர்களே" என்று அழைத்தார்.

பிலிப்பியர்களின் கடந்த காலக் கீழ்ப்படிதல் பற்றி அப்போஸ்தலர் பின்வரும் திகைப்புக்குரிய கூற்றை ஏற்படுத்தினார்: "நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே." அதாவது அவர்கள் பவுலினால் வெளிப்படுத்தப்பட்டிருந்த தேவனுடைய அறிவுறுத்துதல்களுக்கு எப்போதும் கீழ்ப்படிந்திருந்தனர். பவுல் தேவனுடைய பிரதிநிதியாக இருந்ததால், அவரது உரையைக் கேட்பவர்கள், ஏவுதல் பெற்ற அவரது போதனைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டனர் (காண்க ரோமர் 1:5; 15:18; 2 கொரிந்தியர் 10:6; 2 தெசலோனிக்கேயர் 3:4; பிலேமோன் 21). அவர்கள் *எப்பொழுதும்* கீழ்ப்படிந்திருந்தனர் என்ற கூற்று, அவர்களை நினைக்கிற *பொழுதெல்லாம்* தேவனை ஸ்தோத்திரித்தார் என்ற அப்போஸ்தலரின் முந்திய கூற்றைப்போன்றே (1:3) திகைக்கச் செய்வதாக உள்ளது! மீண்டும் ஒரு முறை, பவுல் தமது "தேர்ந்து எடுக்கப்பட்ட நினைவுகூருதலை" பயன்படுத்தியிருக்கச் சாத்தியக்கூறுள்ளது. அனேகமாக அவர்கள் ஏவுதல் பெற்ற பவுலின் அறிவுறுத்துதல்களுக்குக் கீழ்ப்படிய, பொதுவாக எப்பொழுதுமே தயாராக இருந்திருப்பார்கள் என்பது இங்கு சிந்தையாக இருக்கலாம். பரலோகத்தின் கட்டளைகளுக்கு *எப்பொழுதுமே* நாம் கீழ்ப்படிந்து இருக்கிறோம் என்று மற்றவர்கள் நம்மைக் குறித்துக் கூற முடிந்தால் அது அற்புதமான விஷயமாயிருக்காதா?

பிலிப்பியர்கள் கீழ்ப்படிதலின் பாதையில் தொடர வேண்டும் என்று பவுல் வற்புறுத்திக்கேட்டுக் கொண்டார்: "ஆதலால், ... நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும் பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும் ..." பவுல் இதற்கு முன் பலவேளைகளில் பிலிப்பி நகரத்தில் சற்றுக் காலத்தைச் செலவிட்டிருந்தார் (காண்க நடபடிகள் 16:12-40; 20:1-3, 6). அங்கிருந்த சகோதரர்கள் தங்களுடன் அவர் இன்னும் இருக்கிறார் என்பது போன்று நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். நான் சிறு பிள்ளையாக இருந்தபோது, எனது பெற்றோர்கள் என்னிடத்தில் ஒரு வேலையைக் கொடுத்தால், அவர்கள் என்னைக் கவனித்துக்கொண்டு இருக்கும்போது நான் அவ்வேலையைப் பொதுவாகக் கடினமாகச் செய்வேன். என்னைத் தனியே விட்டுவிட்டு அவர்கள் செல்லும் போது, சில வேளைகளில் நான் வேலை செய்வதற்குப்பதிலாக விளையாடுவேன். சில தனிநபர்கள் வளர்கிறபோது, ''குழந்தைத்தனத்திற்குரியவற்றை விட்டுவிடுவது இல்லை" (காண்க 1 கொரிந்தியர் 13:11): அவர்கள் தங்களுக்கு வேலை அளிப்பவர்கள் இருக்கும்போது கடினமாக உழைக்கின்றனர் மற்றும் அவர்கள் இல்லாதபோது, கொஞ்சமே வேலை செய்கின்றனர். அப்படிப்பட்ட மக்கள் "மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ் செய்கின்றனர்" என்று பவுல் கூறினார் (எபேசியர் 6:6).

ஆவிக்குரிய பொறுப்புகளை பற்றிய விஷயங்களில், ஒரு சிலர் அவ்வாறு இருக்கின்றனர் என்பது கவலைக்குரியதாகும். அவர்கள் செய்வது என்ன என்பதை யாரேனும் ஒருவர் பார்க்க முடிகிற வரையிலும், தங்களின் முயற்சிகளுக்காக தாங்கள் அங்கீகரிக்கப்படுகிற வரையிலும் மதரீதியான செயல்களை அவர்கள்

காட்சிப்படுத்துகின்றனர். எவரொருவரும் கவனிக்காதபோது, அவர்கள் எஜமானரின் ஊழியத்திற்குத் தங்கள் நேரத்தையும் தாலந்துகளையும் பயன்படுத்துவதில் சிறிதளவே ஆர்வம் கொண்டுள்ளனர். இவர்களைப் போன்று பிலிப்பியர்கள் இருப்பதைப் பவுல் விரும்பவில்லை. NCV வேதாகமத்தில், "நான் உங்களிடம் இல்லாத இப்பொழுது நீங்கள் கீழ்ப்படிதல் இன்னும் அதிக முக்கியமாக இருக்கிறது" என்றுள்ளது. அவர்களின் கீழ்ப்படிதல் அந்த வேளையில் "இன்னும் அதிக முக்கியமானதாக இருந்தது" ஏனென்றால், (1) விட்டுவிட்டு வெளியேறுவதற்கான அழுத்தம் அதிகரித்துக் கொண்டு இருந்தது (1:28-30) மற்றும் (2) தனிப்பட்ட ஊக்குவிப்பைக் கொடுக்கப் பவுல் இல்லாத நிலையில் சிலர் விழுந்து போகலாம். நீங்களும் நானும் தேவனுக்கு ஏன் கீழ்ப்படிய வேண்டும்? நாம் கர்த்தரை விசுவாசத்துடன் பின்பற்றுவதை மற்றவர்கள் அறியாயிருப்பினும் மற்றும் நாம் நன்றிகளைப் பெறாதிருப்பினும், கர்த்தரை நாம் விசுவாசத்துடன் பின்பற்ற கற்றுக் கொள்ள வேண்டும். தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது *சரியாக* உள்ளது என்பதால் கர்த்தருக்குக் கீழ்ப்படியக்கற்றுக்கொள்வது கிறிஸ்தவர் என்ற வகையில் பக்குவம் அடைதலின் பாகமாக இருக்கிறது.

## ஊழியம் செய்ய வேண்டிய அவசியம்

பவுல், பிலிப்பியர்கள் மத்தியில் தாம் இல்லாதிருந்த நிலையில சும்மா இருப்பதற்குப் பதில், "உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" என்று அவர்களுக்கு ஊக்கமூட்டினார் (2:12இ). RSV வேதாகமத்தில் "உங்கள் சொந்த இரட்சிப்பிற்காகப் பிரயாசப்படுங்கள்" என்றுள்ளது. பவுலின் வார்த்தைகள் நாமகரணக் கூட்டத்தாரின் சில விளக்கவுரையாளர்களைத் தொந்தரவு செய்துள்ளன. எடுத்துக்காட்டாக, இரட்சிப்பைப் பொறுத்த மட்டில் மனித முயற்சி, எதுவும் செய்வதற்கில்லை என்று நினைப்பவர்களை அவரது [பவுலின்] வார்த்தைகள் தொந்தரவு செய்துள்ளன - ஏனென்றால் முகப்பு மதிப்பை எடுத்துக்கொள்கையில் இவ்வார்த்தைகள் தனிநபருடைய ஊழியம் மற்றும் அவரது நித்திய வெகுமதி ஆகியவற்றிற்கு இடையில் உறவு இருப்பதாகக் கருத்துத் தெரிவிக்கின்றன. இந்த வார்த்தைகள், ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர் ஒருக்காலும் தவறிவிழ முடியாது என்று போதிப்பவர்களையும் தொந்தரவு செய்கின்றன - ஏனென்றால் இந்த வார்த்தைகள், ஒரு கிறிஸ்தவரால் சில செயல்கள் செய்யப்படாவிட்டால், அவர் மகிழ்வுடன் அனுபவிக்கும் இரட்சிப்பு இழந்துபோகப்படக்கூடும் என்று மறைமுகமாக உணர்த்துகின்றன. இதன் விளைவாக, சில எழுத்தாளர்கள், இவ்வசனப் பகுதியைச் சற்று நீளமாகவே "விவரிக்க" முயற்சி செய்துள்ளனர்.

பிலிப்பி நகரில் இருந்த சபைக் குழுமம், சச்சரவினால் நிரம்பி இருந்தது என்று நினைத்தவர்கள் "இரட்சிப்பு" என்ற வார்த்தை பாவத்திலிருந்து இரட்சிப்பு என்பதைக் குறிப்பதில்லை ஆனால் உறுப்பினர்களின் சிறுமைத் தன்மையிலிருந்து "விடுவிக்கப்படுதல்" அல்லது அவர்களின் மாறு பாடுகளில் இருந்து "குணமாகுதல்" என்பதைக் குறிக்கிறது என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். [இருப்பினும்] "இரட்சிப்பு" என்ற வார்த்தை சபைக்குழுமம் சார்ந்த பிரச்சனைகளில் இருந்து விடுவிக்கப்படுதல் என்பதைக் குறிக்கிறது என்று கருத்துத் தெரிவிக்கும் ஒவ்வொருவரும் இவ்வசனப் பகுதியை விளக்கி அப்புறப்படுத்தும் முயற்சியின் குற்றத்தைக்கொண்டு இருப்பதில்லை; சிலர் இவ்வசனப்பகுதி இதைத்தான்

பேசுகிறது என்று மட்டும் நினைக்கின்றனர். இருந்தபோதிலும், இந்த அணுகுமுறையானது "இரட்சிப்பு" என்பது பாவங்களில் இருந்து இரட்சிப்பு என்பதைத் தவிர வேறு சிலவற்றைக் குறிப்பதாக ஏற்படுத்துவதால், இது முன்பு குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களுக்கு விசேஷித்த வேண்டுகோள் ஒன்றைக் கொண்டுள்ளது.

"இரட்சிப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *soterias* என்ற கிரேக்க வார்த்தை பல்வேறு வழிகளில் மொழிபெயர்க்கப்பட முடியும் என்பது உண்மையாகவே உள்ளது. இருப்பினும், "பவுல், *soterias* என்ற வார்த்தையை நித்திய இரட்சிப்பு என்ற கருத்தில் சீராகப் பயன்படுத்துகிறார் (1:28; ரோமர் 1:16; 10:1, 10; 13:11; 2 கொரிந்தியர் 6:2; 7:10; எபேசியர் 1:13; 1 தெசலோனிக்கேயர் 5:8f; 2 தெசலோனிக்கேயர் 2:13)."[1] உடனடி சந்தர்ப்பப் பொருளில் எதுவும், இவ்விடத்தில் அப்போஸ்தலர், இந்த வார்த்தையை மாறுபட்ட அர்த்தத்தில் பயன்படுத்தினார் என்று நம்பும்படி நம்மை வழிநடத்துவதில்லை. எனது நூலகத்தில் உள்ள தரமான ஒவ்வொரு மொழிபெயர்ப்பு (வேதாகமும்) பிலிப்பியருக்கு 2:12ல் "விடுதலை" அல்லது "குணமாக்குதல்" என்பதை அல்ல, ஆனால் "இரட்சிப்பு" என்பதையே கொண்டுள்ளது. ஆகவே நாம் மொழிபெயர்ப்பை அது இருக்கிறவாறே விட்டுவிடுவோம்.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் கிரியை செய்ய வேண்டியதற்கான அவசியம் பற்றி அதிகம் கூறப்பட்டுள்ளது (காண்க 1 கொரிந்தியர் 15:58; 2 கொரிந்தியர் 5:10; கொலோசெயர் 1:10; யாக்கோபு 2:24; 1 பேதுரு 1:17). என்னைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். நாம் செய்கிற கிரியைகளின் மூலமாக நாம் இரட்சிப்பை *ஈட்டுகிறோம்* அல்லது *அதற்குத் தகுதியாகிறோம்* என்று புதிய ஏற்பாடு போதிப்பதில்லை. ரோமர் 11:6, எபேசியர் 2:9 மற்றும் 2 தீமோத்தேயு 1:9 போன்ற வசனப்பகுதிகள் *விசுவாசத்தின்*அடிப்படையின் மீது (எபேசியர் 2:8) தேவனுடைய கிருபையால் (தகுதியற்றவருக்குத் தரப்படும் ஈவு) நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்று திட்டவட்டமாக உரைக்கின்றன. அதே வேளையில், *கீழ்ப்படிதல்* உள்ள விசுவாசமே - அன்பினால் *கிரியை செய்யும்* விசுவாசம் (கலாத்தியர் 5:6) - *இரட்சிக்கும்* விசுவாசமாக உள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு விளக்கவுரையாளர் பின்வருமாறு எழுதினார்:

> *நம்பிக்கை வைத்தலும் கீழ்ப்படிதலுமே* விசுவாசத்தின் அடிப்படைக் கூறுகளாக உள்ளன என்பதை நாம் அறியாத வரையில், விசுவாசம் என்பதற்குப் பவுல் தரும் அர்த்தத்தை நாம் ஏற்புடைய வகையில் புரிந்து கொள்வதில்லை ... தெசலோனிக்கேயர்கள் விசுவாசத்திற்கு வந்தது பற்றிப் பவுல் பேசியபோது (1 தெசலோனிக்கேயர் 1:8), அவர்களின் *கீழ்ப்படிதலைப்* பற்றி அவர் எழுதினார். ரோமர் 1:8ல் அவர் "உங்கள் விசுவாசம்" என்பதைப் பற்றியும் ரோமர் 16:19ல் "உங்கள் கீழ்ப்படிதல்" என்பதைப் பற்றியும் அவர் எழுதினார், இவை இரண்டும் ஒரே விஷயத்தைத் தெளிவாக அர்த்தப்படுத்தின. ரோமர் 1:7ல் அவர், "விசுவாசத்துக்குக் கீழ்ப்படிதல்"என்ற சொற்றொடரை மிகச்சரியாகப் பயன்படுத்தினார். இது அநேகமாக "விசுவாசமாகிய கீழ்ப்படிதல்" என்று அர்த்தப்படலாம்.[2]

[இக்கருத்துடன்] இன்னொரு எழுத்தாளர் பின்வருமாறு உடன்பட்டார்:

*... விசுவாசித்தல் என்பதில் கீழ்ப்படிதல் அடங்கியுள்ளது. விசுவாசம் என்பது சில விஷயங்கள் உண்மையாக இருக்கும் என்று ஒத்துக்கொள்ளும் விஷயமாக மாத்திரமேயுள்ளது என்று நினைத்தல், துன்பமான ஒருபொறியாக/கண்ணியாக உள்ளது. இல்லை! பிசாசுகளும்கூட தேவனும் இயேசு கிறிஸ்துவும் உண்மையானவர்கள் என்று ஒப்புக்கொள்ளும், ஆனால் அவைகள் இன்னமும் பொல்லாதவைகளாகவே உள்ளன.*

*நெருப்புக்கு எதிராக காப்பீடு அளித்தலை நீங்கள் நம்புகிறீர்களா? உங்கள் வீட்டை நீங்கள் காப்பீடு செய்திருக்கிறீர்களா? இல்லையா? அப்படி என்றால் நீங்கள் அதில் நம்பிக்கை வைப்பதில்லை! யாக்கோபு ... கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது என்று தெளிவாகக் கூறுகிறார்* [*யாக்கோபு 2:26*]. *ஒவ்வொரு கிறிஸ்தவ நபரும் யாக்கோபு எழுதிய நிருபத்தை அதிலும் குறிப்பாக இரண்டாம் அதிகாரத்தை அடிக்கடி வாசிக்க வேண்டும்.*[3]

கீழ்ப்படிதலின் கிரியைகள் விசுவாசத்தின் நடைமுறைப் பகுதியாக உள்ளன. நமது கிரியைகளினால் நாம் நமது விசுவாசத்தை வெளிப்படுத்துகிறோம், நமது நம்பிக்கையைக் காண்பிக்கிறோம் மற்றும் நமது உறுதிப்பாட்டின் பலத்தைச் செயல்விளக்கப்படுத்துகிறோம். நாம் நமது கிரியை*களினால்* இரட்சிக்கப்படுவதில்லை என்று கூறப்படுகிறது, ஆனால் அவை *இல்லாத நிலையிலும்* நாம் இரட்சிக்கப்பட முடியாது.

12ம் வசனத்தின் “நிறைவேற” என்பது “வெற்றிகொள்ள, நிறைவேற்ற”[4] என்று அர்த்தப்படுகிற *katergazomai* என்ற கூட்டு வார்த்தையில்[5] இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தை “முடித்து வைத்தலுக்குக் கொண்டுவருதலின் கருத்தையே எப்போதும் கொண்டுள்ளது” என்று வில்லியம் பார்க்ளே என்பவர் கருத்துத் தெரிவித்தார்.[6] NCV வேதாகமத்தில் “உங்கள் இரட்சிப்பை நிறைவேற்றத் தொடர்ந்து கிரியை செய்து கொண்டிருங்கள்” என்றுள்ளது. AB வேதாகமத்தில் “உங்கள் சொந்த இரட்சிப்பு (நாட்டப்பட, இலக்கை கொண்டுசெல்ல மற்றும் முழுமையாக நிறைவேற) கிரியை செய்யுங்கள்” என்றுள்ளது. இது, நீங்கள் உங்கள் கடந்த காலப் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்பட நீங்கள் ஞானஸ்நானம் பெற்றபோது, நல்ல தொடக்கம் செய்தீர்கள் [காண்க மாற்கு 16:16; நடபடிகள் 2:38; ரோமர் 6:3-6, 17, 18], மற்றும் நீங்கள் அது முதல் ஊழியத்தின் வாழ்வை வாழ்ந்தீர்கள் - ஆனால் இது நிறுத்துவதற்கான வேளையல்ல. இன்னும் செய்யப்படவேண்டிய கிரியைகள் உள்ளன! என்று பவுல் கூறுவது போன்றுள்ளது.

நம்மில் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் பணி மும்முரமாக இருக்க வேண்டும். தேவனுடைய பிள்ளை ஒவ்வொருவரிடத்திலும் கேட்டுக்கொள்ளப்படுகிற பொதுவான நிபந்தனைகள் உள்ளன மற்றும் பிற நிபந்தனைகள் ஒரு கிறிஸ்தவரின் திறன்கள் மற்றும் வாய்ப்புக்களுக்கு ஏற்ப மாறுகின்றன என்று நாம் முன்னதாகக் குறிப்பிட்டோம். இவற்றில் பிந்திய விஷயத்தைப் பொறுத்த மட்டில், உங்களிடம் தேவன் எதிர்பார்ப்பது என்ன என்று நீங்கள் ஜெபம் நிறைந்த வகையில் தீர்மானிக்க வேண்டும். ஒரு வேளை அவர் உங்களுக்கு, பிரசங்கிப்பதற்கு அல்லது போதிப்பதற்கு, கர்த்தருடைய பந்தியைத் தயார் செய்வதற்கு அல்லது சபை கூடி வரும் இடத்தைச் சுத்தம்

செய்வதற்கு திறனைக் கொடுத்திருக்கலாம். ஒரு வேளை அவர் உங்கள் அயலகத்தவர்களுக்கு நீங்கள் உதவி செய்யும்படிக்கு அன்பும் பரிவிரக்கமும் உள்ள இருதயத்தைக் கொடுத்திருக்கலாம். நீங்கள் ஒரு இளம் தாயாக இருந்தால், அவருடைய (தேவனுடைய) வழியில் உங்கள் பிள்ளைகளை வளர்த்தல்மீது நீங்கள் கவனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். நீங்கள் உலகப்பிரகாரமான வேலை ஒன்றைப் பெற்றிருந்தால், உங்கள் உடன் பணியாற்றுபவர்களுடன் நீங்கள் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்புகிறார். உங்கள் நேரத்தில் பெரும்பான்மையான பகுதி வயது முதிர்ந்த உங்கள் பெற்றோர்களைக் கவனிக்க எடுத்துக்கொள்ளப்படலாம். செய்ய வேண்டிய பணிப்பொறுப்பு *எதுவாக இருந்தாலும்*, அது செய்யப்படும்படி தேவன் விரும்புகிற *வழி* ஒன்றுள்ளது. பவுல், ஏவுதல் பெற்ற தமது "வேலைபற்றிய விவரிப்பில்" தொடர்ந்து "எவ்வாறு" (செய்யவேண்டும்) என்பது பற்றி நமக்குக் கூறுகிறார்.

## வேலைக்கு இன்றியமையாத விஷயங்கள் (2:12இ-18)

### பயபக்தியோடு செயல்படுங்கள் (2:12இ)

*பயபக்தியோடு* செயல்படுதல் என்பது இன்றியமையாத முதல் விஷயமாக உள்ளது: "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (வசனம் 12இ). "பயத்தோடும் நடுக்கத்தோடுமா"? "பயம்" (Gk.: *phobos*) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையில் இருந்தே நாம் "phobia" என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகிறோம். இது, நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்யும் போது மனக்கவலையினாலும் படபடப்பினாலும் மூழ்கடிக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறதா? இல்லை. "பயம்" என்பது வேதவசனங்களில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது போன்றே, இவ்விடத்திலும் ஆழ்ந்த பக்தி மற்றும் மரியாதை என்ற கருத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. 1 பேதுரு 3:1ல் *phobos* என்ற வார்த்தை, "பயபக்தியோடு கூடிய ... நடக்கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது நம்மைத் தேவனை விட்டுத் துரத்தும் மன அமைவாக அல்ல, ஆனால் - தேவனுடைய மாபெரும் தன்மையையும் அவரை நாம் சார்ந்துள்ளதையும் நாம் ஒப்புக்கொள்ளுகையில் - நம்மைத் தேவனிடத்திற்குச் செலுத்தக் கூடிய மனதின் அமைவாக உள்ளது. AB வேதாகமம், 12ம் வசனத்தில் பின்வரும் விளக்க வார்த்தைகளை உட்செருகுகிறது:

> அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் (சுயத்தின்மீது நம்பிக்கை வைக்காதிருத்தல், தீவிரமான முன்னெச்சரிக்கை மனச்சாட்சியின் மென்மைத் தன்மை, சோதனைக்கு எதிராகக் கவனத்துடன் இருத்தல்; தேவனுக்குக் கோபமூட்டக்கூடிய மற்றும் கிறிஸ்துவின் நாமத்தைக் கனவீனப்படுத்தக் கூடிய எல்லாவற்றிலும் இருந்து பயத்துடன் சுருக்கிக் கொள்ளுதல்) உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்.

நாம் தேவனுக்கு ஊழியம் செய்கையில், பயத்தினால் நாம் முடக்கப்பட்டு விடக்கூடாது; ஆனால் அதே வேளையில் நாம் நமது பணிப்பொறுப்பின்

தீவிரத்தன்மையையும் நாம் யாருக்கு ஊழியம் செய்கிறோமோ அவருடைய மாபெரும் தன்மையையும் ஒருக்காலும் மறந்து விடக்கூடாது. நாம் எப்போதும் அவருக்கு, "பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை" ஏறெடுக்க வேண்டும் (எபிரெயர் 12:28).

### உறுதியான நம்பிக்கையுடன் செயல்படுங்கள் (2:13)

சிலர், "தேவனுக்காக ஊழியம் செய்தல் என்பது கடினமானதாக ஒலிக்கிறது. அதை என்னால் செய்ய முடியும் என்று நான் நிச்சயமாய்க் கூறமுடிவதில்லை!" என்று சொல்லலாம். அதை நீங்கள் தனியே செய்யும்படி எதிர்பார்க்கப்படுவதில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஆண்டவர் ஆணைகளை மாத்திரமல்ல, ஆனால் பலத்தையும் உங்களுக்குக் கொடுக்கிறார். *உறுதியான நம்பிக்கையுடன்* செயல்படுதல் என்பது இரண்டாவது நிபந்தனையாகும் - தேவன் உங்களுக்கு உதவுகிறார் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். தொடர்ந்து பவுல், "ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவாயிருக்கிறார்" என்று கூறினார் (வசனம் 13).

"செய்கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *energein* என்ற கிரேக்க வினைச்சொல்லில் இருந்தே நாம் "energy" மற்றும் "energize" என்ற ஆங்கில வார்த்தைகளை பெறுகிறோம். 13ம் வசனத்தில் இது இருமுறை காணப்படுகிறது. இருமுறையுமே இது "செய்கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (தமிழ் வேதாகமத்தில் இது "செய்கை" மற்றும் "உண்டாக்குதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) தேவன் நமக்கு "சக்தியூட்டுகிறார்." நமக்கு அவர் எதைப்பொறுத்த மட்டில் சக்தியூட்டுகிறார்? அவருக்காக ஊழியம் செய்ய நமக்கு குறைந்த பட்சம் இரண்டு விஷயங்கள் தேவைப்படுகின்றன. அவருக்காக ஊழியம் செய்வதற்கான விருப்பம் மற்றும் அவருக்காக ஊழியம் செய்யும் செயல் திறம். இவ்விரு விஷயங்களிலும் அவர் உதவுகிறார் என்று நமது வேதவசனப்பகுதி அறிவிக்கிறது: அவர் "விருப்பத்தையும் செய்கையையும்" நமக்குள் "உண்டாக்குகிறவராயிருக்கிறார்." CEV வேதாகமத்தில், "நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிய மனவிருப்பமும் செயல்திறனும் உள்ளவர்களாக இருப்பதற்கு அவர் உங்களுக்குள் கிரியை செய்கிறார்" என்றுள்ளது. NRSV வேதாகமம், அவர் "நீங்கள் அவருடைய நன் மகிழ்ச்சிக்கு மனவிருப்பமும் ஊழியம்செய்யும் பண்பும் கொண்டிருக்கச் செய்கிறார்" என்றுள்ளது. இதைத் தேவன் அற்புதவிதமாகச் செய்கிறாரா? இல்லை, நமக்குள் தேவன் கிரியை செய்யும் வழிகளில் சிலவற்றைப் பற்றி நாம் முன்னதாகக் கலந்துரையாடினோம். நமக்குள் ஊழியம் செய்வதற்கான "சித்தம்" அல்லது "விருப்பம்" உண்டாக்குவதற்காகக் கூட அவர் கிரியை செய்ய முடியும். சித்தமானது வேதவசனங்களை வாசித்தல், உரிய வேளையிலான ஒரு பிரசங்கம், கிறிஸ்தவ நண்பர் ஒருவரின் ஊக்குவித்தல் அல்லது மனச்சாட்சியை அசையச்செய்தல் என்பவற்றினால் தூண்டப்படலாம். இந்தக் காரணிகள் யாவும் நமது வாழ்வில் தேவன் கிரியைசெய்தலின் பாகமாக உள்ளன. அவர் நமக்குள் மிகச்சரியாக எவ்வாறு கிரியை செய்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளுதல் அல்ல ஆனால் அவர் அதைச் செய்கிறார் என்பதை ஏற்றுக்கொள்வதே முக்கியமான விஷயமாக உள்ளது. நாம் செய்வதற்கு வேலையை/ஊழியத்தை கொடுத்துவிட்டு புறம்பே விலகிச் சென்று நாம் நமது சொந்தப் பொறுப்பிலேயே அந்தப் பணிப்பொறுப்பில்

உழலச் செய்தலைத் தேவன் செய்வதில்லை. அவர் நம்முடன் தங்கியிருக்கிறார். நாம் அவருக்கு ஊழியம் செய்கையில் ஒருக்காலும் தனிமையாக இருப்பதில்லை (காண்க மத்தேயு 28:20).

தேவன் "தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி" நமக்குள் கிரியை செய்கிறார். நாம் மனவிருப்பத்துடன் ஊக்கத்துடன் அவருக்கு ஊழியம் செய்யும்போது, அது அவருக்குப் பிரியமாயிருக்கிறது. அவர் கீழ்ப்படியாமையில் சந்தோஷம் கொள்வதில்லை, மற்றும் யாரேனும் ஒருவர் கலகம் செய்யும் நிலையிலே மரித்துப்போகும்போது, அவரது இருதயம் உடைந்து போகிறது (காண்க சங்கீதம் 5:4; எசேக்கியேல் 18:23, 32). இருப்பினும் மக்கள் பாவத்திலிருந்து நீதிக்குத் திரும்பும்போது அவர் அதில் பிரியப்படுகிறவராய் *இருக்கிறார்* (காண்க எசேக்கியேல் 33:11). அவர் "தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார்" (சங்கீதம் 149:4).

12ம் வசனம், நாம் நமது இரட்சிப்பு "நிறைவேறப் பிரயாசப்பட" வேண்டும் என்று கூறுகிறது, ஆனால் 13ம் வசனம், தேவன் நமக்குள் "கிரியை" செய்கிறார் என்று கூறுகிறது. இவ்விரு வசனங்களும் குழப்பமூட்டுபவையாக இருக்கக் கூடும். 12ம் வசனத்தை மாத்திரம் நாம் பார்த்தோமானால், இரட்சிக்கப்படுதல் என்பது முற்றிலும் மனிதரீதியான ஒரு பொறுப்பு என்று நாம் முடிவு செய்து விடலாம். 13ம் வசனத்தை நாம் தனிமைப்படுத்தினால், தேவன் முற்றிலும் பொறுப்பேற்கிறார் என்று நாம் முடிவு செய்துவிடலாம். இரட்சிப்பில் தேவனுடைய பகுதிப்பணியையும் தனிநபருடைய பகுதிப்பணியையும் இசைவிணக்கப்படுத்துவதற்குப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கொஞ்சமே முயற்சி செய்தனர். எபேசியர் 2:8 போன்ற, புதிய ஏற்பாட்டின் சில வசனப்பகுதிகள் இரட்சிப்பின் தெய்வீக மற்றும் மனிதரீதியான பகுதிகளை ஒன்றுகலக்கின்றன: "கிருபையினால் [தேவனுடைய பகுதிப்பணி] விசுவாசத்தைக்கொண்டு [மனிதருடைய பகுதிப்பணி] இரட்சிக்கப்பட்டீர்கள்." இருப்பினும், இரட்சிப்பு எவ்வாறு ஒரு கொடையாக ("கிருபையினாலே") இருக்கக்கூடிய அதே வேளையில் அந்தக் கொடையைப் பெற மனிதர் சிலவற்றைச்செய்ய வேண்டியிருக்கும் ("விசுவாசத்தினாலே") என்பதைச் சுருக்கமாக விளக்குவதற்குப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் சிறிதளவே முயற்சி மேற்கொண்டனர். மனிதகுலம் செய்ய முடியாததைத் தேவன் செய்திருந்தார் என்று அறிதல் அவர்களுக்குப்போதுமானதாக இருந்தது, ஆனால் சிலவற்றைச் செய்ய வேண்டியது மனிதர்களுக்கு அவசியமானதாக இருந்தது. சார்லஸ் R. ஏர்டுமான் என்பவர், பிலிப்பியர் 2:12, 13ஐப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்:

> இங்கு இவ்வாறாக, தெய்வீக ராஜரீகம் மற்றும் மனித சுயாதீன முகமை ஆகிவற்றின் மாபெரும் இரு உண்மை நிலைகள் உரைக்கப்படுகின்றன. கிரியை தேவனுடைய கிரியையாகவே உள்ளது. மற்றும் அதே வேளையில், அது மனிதருடைய கிரியையாக உள்ளது. தேவன் ஒரு பகுதி கிரியையும் மனிதர் ஒரு பகுதி கிரியையும் செய்வதில்லை. முழுக்கிரியையும் தேவனுடைய கிரியையாக உள்ளது மற்றும் முழுக்கிரியையும் மனிதனுடைய கிரியையாக உள்ளது. சிந்தனையின் நேர்மாறாகத் தோன்றும் நிலையை ஒப்புரவாக்கப் பவுல் முயற்சி செய்வதில்லை.[7]

பவுலைப் போலின்றி நம்மில் பலர், “தெய்வீக - மனுஷீக நாடகம்”[8] என்று பேட் ஹாரல் என்பவர் அழைத்துள்ள இந்த இரு காரணிகளையும் ஒப்புரவாக்க நிர்பந்திக்கப்படுவதாக உணருகிறோம். இந்த முயற்சியானது, “இங்கு அடங்கியுள்ள ஒரு அல்லது மற்றொரு சத்தியத்தைப் பகுதி மறுத்தல் அல்லது காணாது விடுதல்”[9] என்ற விளைவை ஏற்படுத்தாத வரையிலும் இதில் தீங்கு எதுவும் இருப்பதில்லை. தேவன் செய்துள்ளதையோ அல்லது நாம் செய்யும்படி அவர் கேட்டுள்ளதையோ குறைத்துவிட நாம் துணியாதிருப்போமாக[10] இவ்விரண்டிற்கும் இடையில் ஒரு சமானநிலை இருக்க வேண்டும். ஏர்டுமான் என்பவர் இதைப்பற்றி பின்வருமாறு கூறினார்,

> மனிதப்பொறுப்பின் உணர்வுநிலையானது, தேவனுடைய கிருபை மற்றும் வல்லமை ஆகியவற்றில் உறுதியான நம்பிக்கையினால் சமநிலைப் படுத்தாதவரையிலும் அது பெருவருத்தத்திற்கு வழிநடத்திச் செல்கிறது. மனிதத் தரமானம் மற்றும் உணர்வுடன்கூடிய முயற்சி ஆகியவை இணைந்திராத நிலையில், தேவனுடைய வல்லமை மற்றும் செயல்பாட்டில் உள்ள நம்பிக்கையானது ஒழுக்கரீதியான வலிவின்மையையும் பேரழிவையும் விளைவிக்கிறது.[11]

நமது சொந்த இரட்சிப்பிற்கு நாமே “பிரயாசப்பட” வேண்டியுள்ளதா? ஆம், நாம் பிரயாசப்படுகிறோம். அதைச் செய்வதற்குத் தேவன் நமக்குள் “செயல்படுகிறார்”? ஆம், அவர் அதை செய்கிறார். அவர் அதை செய்கிறார், [எனவே] தேவனுக்கு நன்றி! அவர் நமக்குள் செயல்படுவதால், உறுதியான நம்பிக்கையுடன் நாம் செயல்பட முடியும்!

## மனப்பூர்வமாகச் செயல்படுங்கள்! (2:16)

அடுத்ததாகப் பவுல், நாம் *மனப்பூர்வமாக* ஊழியம் செய்வது அவசியம் என்று உரைத்தார்: “எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்” (வசனம் 16). “முறுமுறுப்பு” என்பதற்கான *goggusmos* என்ற கிரேக்க வார்த்தை “இரகசியமான மற்றும் மறைவான மனநிறைவின்மை, முறுமுறுத்தல், முறையிடுதல் என்பவற்றின் வெளிப்பாடு” என்பதைக் குறிக்கிறது.[12] இவ்வார்த்தையை செப்துவஜிந்த் வேதாகமம், வனாந்திரத்தில் இஸ்ரவேல் மக்களின் முறுமுறுத்தல் மற்றும் முறையிடுதலை விவரிக்கப் பயன்படுத்துகிறது (காண்க யாத்திராகமம் 15:24; 16:7, 8; எண்ணாகமம் 11:1; 16:4). 1 கொரிந்தியர் 10:10ல் பின்வரும் எச்சரிக்கையைத் தருவதற்குப் பவுல், இஸ்ரவேல் மக்களின் உதாரணத்தைப் பயன்படுத்தினார்: “அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்.”

16ம் வசனத்தில் உள்ள “தர்க்கிப்பு” என்பது, *dia* என்ற முன்னிடைச் சொல்லை “வாதிடுதல்” என்பதற்கான (*logismos* என்ற) வார்த்தையுடன் இணைத்துப் பெறப்பட்ட, *dialogismos* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தை “உள்ளாக வாதிடுதல்”[13] என்பதைக் குறிக்கலாம். ஆனால், “பொல்லாத சிந்தனைகள்” என்பதே புதிய ஏற்பாட்டில் இதற்கு மேலோங்கியுள்ள அர்த்தமாக உள்ளது.[14] பிலிப்பியர் 2:16ல் ASV வேதாகமம் இவ்வார்த்தையை “கேள்வி கேட்டல்கள்” என்று மொழி

பெயர்த்துள்ளது மற்றும் CJB வேதாகமம் இதை, "விவாதம் செய்தல்" என்று மொழிபெயர்த்துள்ளது.

இந்த தர்க்கிப்பு தேவனுடனா அல்லது மற்ற கிறிஸ்தவர்களுடனா என்பதில் கல்வியாளர்கள் கருத்து வேறுபடுகின்றனர். இவ்வசனப்பகுதி பிலிப்பி சபையில் இருந்த பிரச்சனைகள் மீது கவனம் குவித்தது என்று நினைப்பவர்கள், இது சக கிறிஸ்தவர்களுக்கு இடையிலான விவாதம் என்ற கருத்திற்கு ஆதரவாக இருக்கின்றனர். மற்றவர்கள், இது தேவனுடன் கருத்து வேறுபாடு - அதாவது, தேவனுடன் "விவாதம் செய்ய" அல்லது தமது வழக்கை அவர் முன் கொண்டுவர விரும்பிய யோபுவைப் போன்று (காண்க யோபு 31:35-37) பிலிப்பியர்கள் இருந்தனர் - என்று நம்புகின்றனர். இன்றைய நாட்களில் சிலர் வாழ்வில் நியாயமற்ற விஷயம் பற்றி அல்லது அவர்களிடத்தில் அவர் வேண்டுவது என்ன என்பது பற்றித் தேவனுடன் விவாதிக்க விரும்புகின்றனர். இவ்விரு விளக்கங்களையும் பிரித்தல் தேவையற்றதாக உள்ளது. இஸ்ரவேல் மக்கள் மோசேயைக் குறித்து முறையிட்டபோது (எண்ணாகமம் 16:41), அவர்கள் கர்த்தருக்கு எதிராக முறுமுறுத்தனர் (எண்ணாகமம் 17:10). சபையின் உறுப்பினர்கள் ஒற்றுமையாகச் செல்லாதபோது, தேவன் அதைத் தம்முடையதாக எடுத்துக்கொள்கிறார் (காண்க 1 யோவான் 4:20).

''முறுமுறுப்பு'' மற்றும் ''தர்க்கிப்பு'' என்ற வார்த்தைகளை நான் வாசிக்கும்போது, எனக்குச் சில பிள்ளைகளின் நினைவு வருகிறது. அவர்கள் எதையாவது செய்யவேண்டும் என்று அவர்களின் பெற்றோர்கள் கூறும்போது, அவர்கள் முறுமுறுக்கின்றனர் மற்றும் சிலவேளைகளில் தங்கள் பெற்றோர்களுடன் விவாதம் செய்கின்றனர். நாம் நமது பரலோக பிதாவின் அறிவுறுத்துதல்களுக்குக் கீழ்ப்படிவதில் அதிகம் பக்குவமானவர்களாக இருக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார்.

"எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" என்ற புத்திமதி, பொதுவான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளது; ஆனால் சந்தர்ப்பப்பொருளில் இது, கர்த்தருக்கு ஊழியம் செய்தலை விசேஷமாகக் குறிக்கிறது. எஜமானருடைய ஊழியத்தில் செயல் துடிப்பாக இருக்கும் சிலர், தொடர்ந்து முறுமுறுத்தல் மற்றும் முறையிடுதலினால் தங்கள் முயற்சிகளைப் பாழாக்குகின்றனர். நாம் தேவனுக்கு ஊழியம் செய்யும்போது, நமது முறுமுறுத்தலைத் தேவன் எவ்வாறு கண்ணோக்குகிறார்? உங்களுக்கு யாரேனும் ஒருவர், ஒரு பரிசை - ஒருவேளை அது உங்கள் மனதை ஈர்க்கக்கூடிய பரிசாக, நீங்கள் எப்போதுமே பெற்றிருக்க விரும்பிய ஒரு பரிசாக இருக்கலாம் - கொடுப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். இருப்பினும் அதை அவர் கொடுக்கையில், அதன் விலை பற்றி அவர் முறையிட்டார் அல்லது உங்களுக்கு எதையும் கொடுக்காது இருக்க தேர்ந்துகொண்டதாகச் சுட்டிக்காட்டினார் என்று கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் எவ்வாறு உணருவீர்கள்? நீங்கள் அனேகமாக, அவர் தரும் அப்பரிசை அவரே வைத்துக்கொள்ளும்படி கூறுவீர்கள்! தேவனுடைய தெய்வீக ஆணைகளைச் செயல்படுத்துகையில், நாம் முறுமுறுத்தல் மற்றும் முறையிடுதலைச் செய்யும்போது, கர்த்தர் எவ்வாறு உணருவார் என்பதை கற்பனைசெய்ய முயற்சி செய்யுங்கள். நாம் மனப்பூர்வமாக ஊழியம் செய்ய வேண்டும்.

## *குற்றமற்ற வகையில் செயல்படுங்கள்! (2:14, 15)*

*அடுத்ததாக, நாம் குற்றமற்ற வகையில் ஊழியம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். பவுல், ''எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்'' (வசனம் 16) என்று கூறுவதற்கு முன்பு, அவர் "ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப்பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு" என்று கூறியிருந்தார் (வசனங்கள் 14ஆ, 15).*

*சமீபத்தில் நான், எனது வீட்டில் பழுது நீக்கும் பணியைச்செய்வதற்குப் பல மனிதர்களுக்கு கூலி கொடுத்தேன். நம்பிக்கைக்குப் பாத்திரமான ஊக்கமான மற்றும் திறமைவாய்ந்தவர்களாக இருந்த பணியாளர்களை வேலைக்கு அமர்த்த நான் விரும்பினேன் - ஆனால் அவர்களின் சொந்த வாழ்வைப் பற்றிச் சிறிதளவே நான் அறிந்திருந்தேன். உலகப்பிரகாரமான பல பணிப்பொறுப்புகள், தேவபக்தி இல்லாத மனிதர்களால், அவர்களின் ஆவிக்குரிய தன்மையிலுள்ள குறைபாடு அவர்கள் வேலையைப் பாதிக்காத வகையில் செய்யப்பட முடியும். ஆவிக்குரிய பணிப்பொறுப்புகளைப் பொறுத்தமட்டில் இது உண்மையாயிருப்பதில்லை. பண்பில் உள்ள எந்தக் குறைபாடும் இயேசுவின் நாமத்தில் செய்யப்படும் முயற்சிகளை அழித்துப் போடுகிறது.*

*நாம் கொண்டிருக்கத் தேவையான பண்பின் வகை என்ன? முதலில் பவுல், நாம் "குற்றமற்றவர்களாக" இருக்க வேண்டியது அவசியம் என்று கூறினார் (வசனம் 15). "குற்றமற்றவர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, 1:11ல் "இடறலற்றவர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையாக இருப்பதில்லை, இவற்றின் அர்த்தம் ஒன்றுபோல் இருப்பினும் இவைகள் மாறுபட்ட வார்த்தைகளாக உள்ளன. இங்கு நாம் "முறையிடுதலுக்குக் காரணம் அல்லது அதன் அடிப்படைத்தளம்" என்று அர்த்தப்படும் வார்த்தை ஒன்றைக் கொண்டிருக்கிறோம், இது எதிர்மறை முன்னிடைச்சொல்லைக் கொண்டுள்ளது. Amemptos என்ற வார்த்தையின் ஒரு வடிவமானது memtos (memphomai லிருந்து, "குற்றம் கண்டுபிடிக்க") என்பதை a என்ற முன்னிடைச் சொல்லுடன் சேர்ந்து இணைக்கிறது.[15] இவ்வார்த்தை "குற்றமில்லாதிருத்தல்" என்று அர்த்தப்படக்கூடும். தேவன் தமது கிருபையின் மூலமாக நம்மை மன்னிக்கும் போதுதான் நாம் அவருடைய பார்வையில் உண்மையிலேயே "குற்ற மற்றவர்களாக" இருக்க முடியும். இருப்பினும் இவ்வசனப்பகுதியில், "விமர்சனத்தின் விரல் நம்மை நோக்கிச் சுட்டிக்காட்டக் கூடாதபடியான வாழ்வை வாழுதல்" என்பதற்கான குறிப்பு உள்ளது.[16]*

*பின்பு பவுல், எதிர்பாராத ஒரு வார்த்தையைக் கூடுதலாகக் கூறினார்: "கபடற்றவர்கள்,'' இன்றைய நாட்களில் பலர், கபடற்ற தன்மையை மிக உயர்வாக மதிப்பிடுவதில்லை. இது அறியாமையில் இருத்தல், அனுபவமற்று இருத்தல் மற்றும் எளிமையாயிருத்தல் ஆகியவற்றுடன் சமானப்படுத்தப்படுகிறது. இருந்தபோதிலும், நாம் ''புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய்'' இருக்க வேண்டும் என்று கர்த்தர் நம்மிடத்தில் விரும்புகிறார் (மத்தேயு 10:16). பிலிப்பியர் 2:15 மற்றும் மத்தேயு 10:16 ஆகிய இரு வசனங்களிலும், "கபடற்றவர்கள்" என்பதற்கான வார்த்தையானது, எதிர்மறை முன்னிடைச்*

சொல்லான a என்பதும் "கலக்க" என்று அர்த்தப்படுகிற *kerannumi,* என்ற சொல்லும் இணைந்து பெறப்பட்ட *akeraios* என்ற கிரேக்க வார்த்தையின் வடிவமாக உள்ளது. இது "கலக்கப்படாத" என்று அர்த்தப்படுகிறது. இது கிரேக்கர்களால், தண்ணீர் கலக்கப்படாத திராட்சை மதுவை அல்லது மற்ற உலோகங்கள் கலக்கப்படாத உலோகத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.[17] நமது வேதவசனப் பகுதியில் இது, கர்த்தர் வேண்டிக்கேட்கிற இருதயத்தின் வகையை விவரிக்கிறது: நல்ல அதாவது பொல்லாங்கு கலக்கப்படாத இருதயம். NIV மற்றும் CJB வேதாகமங்களில் "தூய்மை" என்றுள்ளது. நாம் புறம்பாக நல்லவர்களாக ("குற்றமற்றவர்களாக") இருந்தால் மாத்திரம் போதாது, ஆனால் உள்ளாகவும் நல்லவர்களாக ("கபடற்றவர்களாக") இருக்க வேண்டும்.

குற்றமற்றவர்களாக மற்றும் கபடற்றவர்களாக இருத்தலின் பண்புகள் "மாசற்ற" என்ற வார்த்தையில் தொகுத்துரைக்கப்படுகின்றன. "மாசற்ற" என்பது "குற்றம்," "தவறு," "ஏளனம்செய்தல்," அல்லது "கனவீனப்படுத்துதல்" என்பதற்கான *momos* என்ற வார்த்தையுடன் *a* என்ற எதிர்மறை முன்னிடைச் சொல்லை இணைத்துப் பெறப்பட்ட ஒரு தனி கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[18] நாம் உலகத்தாரால் ஏளனம் செய்யப்படும்படியாகக் கிறிஸ்துவின் மார்க்கத்தை உயர்த்திப் பிடிக்கும் எதையும் செய்துவிடக்கூடாது. யாரேனும் ஒருவர் "ஆனால் பவுல் இந்த உலகத்தை 'கோணலும் மாறுபாடுமான' தென்று விவரித்திருக்கிறாரே. பாவம் நிறைந்த, தேவபக்தி இல்லாத உலகம் என்ன நினைக்கிறது என்பது என்ன வேறுபாட்டை ஏற்படுத்திவிடப்போகிறது?" என்று மறுப்புரை தெரிவிக்கலாம். நாம் நல்ல விஷயங்களுக்காக உலகத்தின் செல்வாக்கை ஈட்ட முயற்சிப்பதால், இது ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. நாம் மக்கள் இருளின் அதிகாரத்தில் இருந்து புறப்பட்டு வெளிவந்து ஒளியின் இராஜ்யத்திற்குள் வர வேண்டும் என்று விரும்புவதால், இது ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது (காண்க கொலோசெயர் 1:13).

விவசாயத் தொழிற்கல்வி ஆசிரியராக இருந்த என் தந்தையார், ஆக்லஹாமா நகரில் நடந்த ஆக்லாஹாமா மாகாணக் கண்காட்சியில் முதன்முறையாக என்னை விட்டுச் சென்ற நிகழ்ச்சி இன்னும் என் நினைவில் உள்ளது. பிற்பாடு தங்கள் வகைகளில் மிகச்சிறந்தவை என்ற பரிசுகளுக்காகப் போட்டியிட வேண்டியிருந்த எங்கள் பண்ணை விலங்குகளுடன் தங்கியிருக்கும்படி, என்னையும் மற்ற மாணவர்களையும் அவர் அழைத்து வந்திருந்தார். தமது வகுப்புகளில் போதிப்பதற்காக அவர் தென்மேற்கு ஆக்லஹாமாவுக்குத் திரும்புகையில், அந்தக் கண்காட்சியில் அவர் எங்களைப் பலநாட்கள் விட்டுச்சென்றார்; போட்டிகள் தொடங்குவதற்குச் சற்று முன்னர் அவர் திரும்பவும் வந்து எங்களுடன் இணைந்து கொள்வதாக இருந்தார். அவர் புறப்பட்டுச் செல்லத் தயாரானபோது, "ரோப்பர்" என்ற பெயர் தைக்கப்பட்டிருந்த எனது மேற் சட்டையைச் சுட்டிக்காண்பித்து, "அது எனது பெயரும்கூட என்பதை மறந்துவிடாதே" என்று கூறினார். அவரது அர்த்தம் தெளிவாக இருந்தது; அவர் இல்லாத போது நான் செய்யும் எந்த ஒரு செயலும், என்மீது மாத்திரமல்ல, ஆனால் அவர் மீதும் பிரதிபலிக்கும், அது போலவே நாம் செய்யும் எந்தச் செயலும் நமது பிதாவின்மீது பிரதிபலிக்கிறது - அது சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ இருக்கலாம். ஆகையால், நாம் "எல்லா மனுஷருக்கு முன்பாவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்"

*(ரோமர் 12:17) என்பதை மறக்கலாகாது.*

*நாம் இழித்துரைக்கப்படுவதற்கு மேலானவர்களாக இருந்தால், நாம் "சுடர்களாக" பிரகாசிப்போம். NASB வேதாகமம், பிலிப்பியர் 1:14ன் மீது பின்வரும் குறிப்பைக் கொண்டுள்ளது: "அல்லது ஒளிவீசுபவைகள், நட்சத்திரங்கள்." "சுடர்கள்" என்பதற்கான கிரேக்க வார்த்தை, செப்துவஜிந்த் வேதாகமத்தில் வானத்தில் உள்ள சுடர்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது: சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் (காண்க ஆதியாகமம் 1:14-18). எனது சிந்தையானது ஆக்லஹாமாவின் கோடை காலத்தில் வெதுவெதுப்பாக இருந்த இரவுகளை நோக்கிப் பின் செல்லுகிறது. நான் கிராமப்புறத்தில் வாழ்ந்தேன் மற்றும் பொதுவாக கோடைகாலத்தில் வெளிப்புறத்தில் படுத்துறங்கினேன். உறக்கம் வரும் வரைக்கும் நான் நட்சத்திரங்களை- வானத்தின் கறுப்பு விரிவின் குறுக்கே சிதறியடிக்கப்பட்டிருந்த சுடர்களின் ஒளிமிக்க முனையங்களை - உற்று நோக்குவதுண்டு.*

*"கோணலும் மாறுபாடுமான சந்ததி" என்பதே 14ம் வசனத்தில் உள்ள "சுடர்களுக்கு" இருளான பின்புலமாக உள்ளது. "கோணல்" என்பதற்குப் பதிலாக, CJB வேதாகமத்தில் "பிறழ்வுபட்ட" என்றுள்ளது. "மாறுபாடு" என்பதற்கு பதிலாக NIV வேதாகமத்தில் "சீர்கெட்ட" என்றுள்ளது. பழைய ஏற்பாட்டில், கலகம் செய்த இஸ்ரவேல் மக்களைக் குறிப்பதற்கு இதே சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது (உபாகமம் 32:5). சில வேளைகளில் நான், இன்றைய நாட்களில் உலகத்தில் கொந்தளித்துப் பொங்கும் துன்மார்க்கத்தினால் மூழ்கடிக்கப்பட்டதாக உணருகிறேன், ஆனால் உலகம் எப்போதுமே "கோணலும் மாறுபாடுமாக" இருந்துள்ளது என்று எனக்கு நானே நினைவூட்டிக்கொள்கிறேன் (காண்க மத்தேயு 17:17; நடபடிகள் 2:40). மேலும் இந்த உலகமானது "கோணலும் மாறுபாடுமாக" இல்லாதிருந்தால் "எனது இந்தச் சிறிய வெளிச்சம்" தேவையில்லாதிருக்கும் என்பதையும் எனக்கு நானே நினைவூட்டிக்கொள்கிறேன்.[19] சூரியனின் ஒளிவீசும் கதிர்கள் சுற்றிலும் பிரகாசிக்கும்போது, ஒரு விளக்கு தேவைப்படுவதில்லை. இந்த உலகம் எவ்வளவு இருளாகிறதோ, அவ்வளவுக்கு நமது "சுடர்களுக்கான" தேவை அதிகமாகிறது - மற்றும் அந்த "சுடர்கள்" அதிகமாகப் பிரகாசிப்பதாகத் தோன்றும்.*

### ***உறுதியாகச் செயல்படுங்கள்! (2:14)***

*நாம் உறுதியாக ஊழியம் செய்ய வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். 14ம் வசனத்தில் தொடங்கிய வாக்கியம் இன்னும் முடிக்கப்படவில்லை. பிலிப்பியர்களை "சுடர்களைப்போல பிரகாசிக்க" அறைகூவல் விடுத்த பவுல், அவர்கள் "ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு" இருக்க வேண்டும் என்றும் கூறினார் (வசனம் 14ஆ). "சுடர்" என்ற ஒப்புவமையானது நட்சத்திரங்களில் இருந்து கையில் பிடித்துச் செல்லப்படும் விளக்கு என்பதற்கு மாறுகிறது. யாரோ ஒருவர் கைவிளக்கு ஒன்றை இறுகப் பிடித்துக் கொண்டு செல்வதை நான் சித்தரிக்கிறேன். சந்தர்ப்பப் பொருளில் இங்கு, மற்றவர்களுக்கு வழியைக் கண்டறிய வெளிச்சம் காட்டுவதன் மீது - இந்த உலகத்தில் உள்ளவர்கள் வழியைக் கண்டறிய உதவுவதன் மீது - வலியுறுத்தம் உள்ளது. "பிடித்துக்கொண்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, "பிடித்துக்கொண்டு முன்சென்று" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும்.[20] இரு கருத்துக்கள் ஒன்று கலக்கப்பட*

முடியும்: வெளிச்சத்தை மற்றவர்கள் கண்டு அதைப் பின்பற்றக்கூடும்படிக்கு நாம், அந்த வெளிச்சத்தை இறுக்கமாகப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

''ஜீவ வசனத்தை'' நாம் உறுதியாகப் பிடித்துக் கொள்ளவேண்டும். ''ஜீவ வசனம்'' என்பது தேவனுடைய வசனமாக உள்ளது. சங்கீதக்காரர், தேவனுடைய வசனம் தமது பாதைக்கு வெளிச்சமாக உள்ளது என்று கூறினார் (சங்கீதம் 119:105). இது ஆவிக்குரிய ஜீவனைக்கொடுப்பதால், "ஜீவ வசனம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. NCV வேதாகமம் இதை, "ஜீவனைக் கொடுக்கும் போதனை" என்று அழைக்கிறது. இயேசு, "ஜீவ வார்த்தை" என்று அழைக்கப்பட்டுள்ளதைச் சில எழுத்தாளர்கள் சுட்டிக் காண்பிக்கின்றனர் (1 யோவான் 1:1). மீண்டுமாக, இரு கருத்துக்களுக்கும் இடையில் சிறு வேறுபாடே உள்ளது. இயேசுவை வெளிப்படுத்துகிற, புதிய ஏற்பாட்டை நாம் பிடித்துக் கொண்டு முன் செல்லாமல், இயேசுவை ஜீவ வசனம் என்ற வகையில் நாம் பிடித்துக் கொண்டு முன்செல்ல முடியாது. நாம் வசனத்தை எவ்வாறு உறுதியாய்ப் பிடித்துக்கொள்கிறோம் - அல்லது பிடித்து முன்செல்லுகிறோம்? நமது வாழ்வினால் (மத்தேயு 5:14-16), ஆனால் நமது உதடுகளினாலும் அதைச் செய்கிறோம் (மத்தேயு 28:18-20). பேட் ஹாரல் என்பவரின் கூற்றுப்படி, "இவ்விடத்தில் பவுல் பிலிப்பியர்கள் பிரசங்கிப்பதில் கடும் உழைப்பாளிகளாக இருக்க வேண்டும் என்று புத்திகூறுகிறார்"[21] - மற்றும் நான் இவ்விடத்தில் "போதிப்பதில்" என்பதையும் கூட்டுவேன்.

பவுல் தமது வாசகர்கள் உறுதியாக நிலைத்திருப்பதற்கு மற்ற ஊக்குவிப்பையும் கொடுத்தார்: ''நான் வீணாக ஓடினதும் வீணாக பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு'' (வசனம் 14அ). ''கிறிஸ்துவின் நாள்'' என்பது கிறிஸ்துமறுபடியும் வந்து ஒவ்வொருவரையும் நியாயந்தீர்க்கும் நாளைக் குறிக்கிறது. அந்த நாளில் அப்போஸ்தலர் "மகிழ்ச்சி அடையக் காரணம்" கொண்டிருக்க - அல்லது NIV வேதாகமம் கூறுகிறபடி, "மேன்மை பாராட்ட" காரணம் கொண்டிருக்க - விரும்பினார். பவுல் தம்மைக் குறித்து மேன்மை பாராட்ட விருப்பம் கொண்டிருந்ததில்லை (காண்க கலாத்தியர் 6:14), ஆனால் அவர் பிலிப்பியர்களைக் குறித்து - அவர்கள் முடிவு பரியந்தம் எவ்வாறு உறுதியுடனும் விசுவாசத்துடனும் இருந்தனர் என்று - மேன்மை பாராட்ட விரும்பினார்.

அவர்கள் அப்படி இருந்தால், பவுல் தாம், "வீணாக ஓடினதும் வீணாக பிரயாசப்பட்டதுமில்லை" என்று அறிவார். அந்தக் கூற்றில் இரு ஒப்புவமைகள் காணப்படுகின்றன. இவற்றில் முதலாவது, ஒரு போட்டியில் பங்கேற்று தனது முயற்சிகள் யாவையும் வீணானவையாக மாத்திரம் கண்ட ஒரு ஓட்டப் பந்தய வீரன் என்ற ஒப்புவமையாகும். அந்த ஓட்டப்பந்தய வீரன் "வீணாக" ஓடியிருந்தான். இரண்டாவது, சந்தைப் படுத்த இயலாத ஒரு பொருளைச் செய்வதற்குக் கடினமாக உழைத்த ஒரு தொழிலாளி என்ற ஒப்புவமையாகும். பவுல் கூடாரம் செய்பவராக இருந்ததால் (நடபடிகள் 18:2, 3) ஒருவேளை அவர், கூடாரத்துணியை நெய்வதற்குத் தேவையான திறமை மற்றும் முயற்சி ஆகியவற்றைத் தமது சிந்தையில் கொண்டிருக்கலாம். அப்போஸ்தலர் எந்த விதமான ''பிரயாசத்தை'' தமது சிந்தையில் கொண்டிருந்தாலும், அவரது விவரிப்பில் அது "வீணானதாக" இருந்தது. இவ்வசனப் பகுதியில் பவுல் தாம்

இரட்சிக்கப்படுவாரா அல்லது இழந்துபோகப்படுவாரா என்பது பற்றி [பிரதான] அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதைக் கூற நான் துரிதப்பட என்னை அனுமதியுங்கள். அவரது இரட்சிப்பைப் பொறுத்த மட்டில் அவர் உறுதியான நம்பிக்கையுடன் இருந்தார் (பிலிப்பியர் 1:21, 23). மாறாக அவர் பிலிப்பியர்கள் மீது தாம் செலவிட்டிருந்த நேரமும் சக்தியும் வீணாய்ப்போகவில்லை என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள விரும்பினார்.

பவுலின் அக்கறையை நான் புரிந்துகொள்கிறேன். நான் போதித்திருக்கிறவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கிறார்கள் என்பதற்காக நான் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன், ஆனால் மற்றவர்கள் மாறுபாடுள்ளவர்கள் ஆகியிருத்தல் அல்லது விசுவாசத்தை விட்டு விலகிச் செல்லுதல் பற்றி நான் வருத்தத்தினால் நிரப்பப்படுகிறேன். இவர்களில் சிலருடன் நான் மணிக்கணக்கில் செலவிட்டு, தனிப்பட்ட வகையில் அவர்களுக்குப் போதித்து அவர்கள் தொடர்ந்து நிலைத்திருக்கும்படி அவர்களை ஊக்குவித்திருக்கிறேன். எனக்கு நெருக்கமான யாரேனும் ஒருவர் கர்த்தருடனும் அவருடைய மக்களுடனும் சரியான உறவில் இல்லை என்ற வார்த்தையைப் பெற்றுக் கொள்வதைக் காட்டிலும் என்னைச் சீரழிப்பது வேறு எதுவுமில்லை. பிலிப்பியர்களிடம் செயல்விளைவில் பவுல், "உங்கள் ஊழியத்தில் நீங்கள் உறுதியாய் தொடாதிருந்தால், அது எனது இரட்சிப்பைப் பாதிக்காது - ஆனால் அது *என் இருதயத்தை உடைந்துபோகச்செய்யும்!*" என்றே கூறினார்.

## சந்தோஷமாக செயல்படுங்கள்! (2:17, 18)

நமது வேதவசனப்பகுதியின் கடைசி வசனங்களில் பவுல், பிலிப்பியர்களிடத்தில் தாம் செய்திருந்த உழைப்பை *வீணாகாது* என்று தாம் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்ததாகச் சுட்டிக்காண்பித்தார். இவ்வசனப்பகுதி, திரும்பத் திரும்பக் குறிப்பிடப்படும் பாடக்கருத்தான, சந்தோஷமாயிருத்தல் என்பதன் மீதான வலியுறுத்தத்துடன் முடிகிறது; "சந்தோஷம்" என்பதற்கான கிரேக்க வார்த்தை 17 மற்றும் 18 வசனங்களில் நான்கு முறை காணப்படுகிறது. ("சந்தோஷம்" மற்றும் "மகிழ்ச்சி" ஆகிய வார்த்தைகள் ஒரே கிரேக்க வேர்வார்த்தையில் இருந்து வருகின்றன.) நமது ஊழியம் உட்பட - சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும் நாம் மகிழ்ச்சி நிறைந்தவர்களாயிருக்க வேண்டும்.

ரால்ஃப் மார்ட்டின் என்பவர், 17 மற்றும் 18 ஆகிய வசனங்களை, "இந்த நிருபம் முழுவதிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தனிப்பட்ட குறிப்பு" என்று அழைத்தார்:[22] "மேலும், உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின்மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும், நான் மகிழ்ந்து, உங்களனைவரோடுங்கூடச் சந்தோஷப்படுவேன். இதினிமித்தம் நீங்களும் மகிழ்ந்து, என்னோடேகூடச் சந்தோஷப்படுங்கள்."

இவ்வசனங்களில் பவுல், பலி செலுத்தும் ஒரு ஆசாரியர் என்ற ஒப்புவமையைப் பயன்படுத்தினார். அவர் தம்மைப் பற்றி, "பானபலியாக வார்க்கப்பட்டு" இருத்தல் என்று பேசுவதில் தொடங்கினார். மூலமொழி வசனத்தில் "ஊற்றப்படுதல்" என்பதே நேரடி அர்த்தமாக உள்ளது. ஆனால் இவ்விடத்தில் உள்ள வினைச்சொல்லானது, பானபலியை ஊற்றுதல் அல்லது தேவனுக்குப் படைக்கப்படும் பானபலி என்பதைக் குறிப்பிடப் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது.[23] பானபலிகள் என்பவை, புறதெய்வ வணக்கம் மற்றும்

*யூதருடைய பலிகளில் பொதுவானவைகளாக இருந்தன. (யூதர்களுடைய பலிகள் பற்றிய விபரங்களுக்கு பின்வரும் வசனப்பகுதிகளை காணவும், எண்ணாகமம் 15:5, 7, 10; 28:7, 14; ஓசியா 9:4.) பவுல் உடனடி மரணம் என்ற மிகவும் உண்மை யான சாத்தியக்கூறு பற்றி குறிப்பிட்டார். பிற்பாடு அவர், ரோமாபுரியில் தமது இரண்டாவது சிறைவைப்பின்போது, தமக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட பின்பு, இதே சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்தினார் (2 தீமோத்தேயு 4:6). பவுல் தமது மரணத்தின் சாத்தியக்கூறு தமது சிந்தையில் எவ்வளவு தெளிவாக இருந்தது என்று சுட்டிக்காண்பிக்க இதில் நிகழ்காலத்தைப் பயன்படுத்தினார். இருப்பினும் அப்போஸ்தலர் - தமது தலையானது தமது உடலில் இருந்து துண்டிக்கப்படும் என்ற - ரோமத்தண்டனையைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தபோது, அவர் பயங்கர நினைவில் அல்ல ஆனால் கனப்படுத்தப்படும் நினைவிலேயே வாசம் செய்தார். சிந்தப்படும் தமது இரத்தம் தேவனுக்கு முன்பாகப் பானபலியாக ஊற்றப்படும் என்று அவர் நினைத்தார்.*

*பவுல், பிலிப்பியரின் விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின் மேலும் தாம் "பானபலியாக" வார்க்கப்பட்டுப் போவதைப் பற்றிப் பேசுவதன் மூலம், ஆசாரியத்துவ ஒப்புவமையைத் தொடர்ந்தார்.* NIV *வேதாகமத்தில், "உங்கள் விசுவாசத்தில் இருந்து வருகிற பலி மற்றும் ஊழியம்" என்றுள்ளது. "பிலிப்பியர்களின் 'விசுவாசம்' என்பது, அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவர்மீது நம்பிக்கை வைத்ததை மாத்திரமல்ல, ஆனால் அவர்களின் விசுவாசம் வெளிப்படுத்தப்பட்ட கிரியைகள் மற்றும் ஒப்புக்கொடுத்தல் எல்லாவற்றையும் அர்த்தப்படுத்தியது."*[24] *பவுல், பிலிப்பியர்களின் கீழ்ப்படிதல் உள்ள விசுவாசத்தை, தேவனுக்குச் செலுத்தப்பட்ட பலியாகக் கண்ணோக்கினார் (காண்க ரோமர் 12:2; பிலிப்பியர் 4:18; எபிரேயர் 13:15, 16). அவரது சிந்தையில், அவரது மரணம் என்ற பானபலி அவர்களின் வாழ்வு என்ற பலியுடன் ஒன்றுகலந்திருந்தது - மற்றும் அது எல்லாமே கர்த்தருக்குச் செலுத்தப்பட்ட பலியாக இருந்தது.*

*பவுல் தமது மரணத்தைப் பற்றி ஆழந்து சிந்திக்கையில், இது அவர் புலம்பக் காரணமாக இருந்ததா? இல்லை, அது சந்தோஷப்படக் காரணமாக இருந்தது: "மேலும், உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின்மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும், நான் மகிழ்ந்து, உங்களனைவரோடுங்கூடச் சந்தோஷப்படுவேன்" (பிலிப்பியர் 2:17). அவர் கொலைசெய்யப்பட்டால், அவர் கர்த்தருடன் இல்லத்தில் இருக்கச் செல்வார் (1:23). இருப்பினும் தமது மரணம் பிலிப்பியர்களைக் கவலைப்படுத்தும் என்று அவர் அறிந்திருந்தார். பிலிப்பியர் 2:26, 28ல் மறைமுகமாய் உணர்த்தப்பட்டபடி, எப்பாப்பிரோதீத்து வியாதிப்பட்டு இருந்ததை கேள்விப்பட்டு, அவர்கள் கவலைப்பட்டிருந்தனர் என்றால், அப்போஸ்தலரின் மரணம் பற்றிய செய்திக்கு அவர்கள் எவ்வாறு பதில் செயல் செய்வார்கள்? ஆகவே அவர்களும் சந்தோஷமாக இருக்கும்படி அவர் வேண்டிக்கொண்டார்: "இதினிமித்தம் நீங்களும் மகிழ்ந்து, என்னோடேகூடச் சந்தோஷப்படுங்கள்."* NIV *வேதாகமத்தில், "எனவே நீங்களும்கூட என்னோடே மகிழ்ந்து சந்தோஷப்படவேண்டும்" என்றுள்ளது.*

*நமது வேதவசனப் பகுதியானது, பகிர்ந்துகொள்ளப்பட்ட சந்தோஷத்தின் மீதான குறிப்புடன் முடிகிறது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமக்கு என்ன நடந்தாலும், நாம் சந்தோஷப்பட வேண்டும் (காண்க சங்கீதம் 118:24) என்ற சிந்தனையுடன், வேலை பற்றிய இந்த விவரிப்பை நான் முடிக்க விரும்புகிறேன்.*

நாம் நமது கவலையான தருணங்களைக் கொண்டிருப்போம் - பவுலும்கூட அப்படிப்பட்ட தருணங்களைக் கொண்டிருந்தார் (பிலிப்பியர் 3:18; 2 கொரிந்தியர் 2:4) - ஆனால் சந்தோஷம் என்பது நமது அடிப்படை நிலைப்பாடுகளில் ஒன்றாக இருக்கவேண்டும். ஒருமுறை ஒரு பேச்சாளர். கிறிஸ்தவர்கள் ஆடு மேய்க்கும் நாய்கள் (மேய்ப்பர்களுக்கு உதவப் பயற்றுவிக்கப்பட்ட நாய்கள்) போன்று இருக்க வேண்டும் என்று கூறினார். உரையைக் கேட்டவர்களில் ஒருவர், அதற்கு விளக்கம் கேட்டார். அதற்கு அந்தப் பேச்சாளர், "சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும் - அது வெப்பமாகவோ அல்லது குளிராகவோ, ஈரமாகவோ அல்லது உலர்ந்தோ எப்படியிருந்தாலும் - மற்றும் வேலையானது கடினமாகவோ அல்லது சுலபமாகவோ எப்படியிருந்தாலும், ஆடுமேய்க்கும் நாய் தனது எஜமானர் கட்டளையிடும் எல்லாவற்றையும் செய்கிறது. அது பாராட்டப்படத் தக்கது. ஆனால் ஆடுமேய்க்கும் நாய் தனக்குத் தரப்பட்ட வேலையை முடித்த பின்பு, தனது எஜமானரிடத்திற்குத் - *தனது வாலை ஆட்டிக் கொண்டு* - திரும்பிவருகிறது. இதுவே நான் அந்த நாயினிடத்தில் மிகவும் விரும்புகிற குணமாகும்" என்று கூறினார்! நாம் மிகவும் சந்தோஷமாக ஊழியம் செய்வது அவசியமாக உள்ளது.

## முடிவுரை

நாம் யாவரும் செய்ய வேண்டிய ஊழியத்தைத் தேவன் நமக்குக் கொடுத்துள்ளார். அதை நாம் செய்ய வேண்டிய விதம் பற்றி அவர் விரும்புவது என்ன? பயபக்தியுடன், உறுதியான நம்பிக்கையுடன், மனப்பூர்வமாக, குற்றமற்ற வகையில், உறுதியாக மற்றும் சந்தோஷமாகச் செய்ய வேண்டும். அதைப் போன்ற ஊழியமானது நமது வாழ்வை வளப்படுத்தி நமது பிதாவை மகிமைப்படுத்தும்!

---

குறிப்புகள்

[1]Pat Edwin Harrell, *The Letter of Paul to the Philippians,* The Living Word Commentary series, ed. Everett Ferguson (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 97-98. [2]Maxie D. Dunnam, *Galatians, Ephesians, Philippians, Colossians, Philemon,* The Communicator's Commentary, ed. Lloyd J. Ogilvie (Waco, Tex.: Word Books, 1982), 285. [3]Manford George Gutzke, *Plain Talk on Philippians* (Grand Rapids, Mich.: Lamplighter Books, Zondervan Publishing House, 1973), 104. [4]Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* abr., ed. Gerhard Kittle and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 421. [5]*Katergazomai* என்று வார்த்தை *kata* என்ற முன்னிடைச் சொல்லை "கிரியை" என்பதற்கான (*ergazomai* என்ற) வினைச் சொல்லின் செயலுக்கு வலுவூட்டுகிறது (*The Analytical Greek Lexicon* [London: Samuel Bagster & Sons, Ltd., 1971], 223; W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III with James A. Swanson [Minneapolis: Bethany House Publishers, 1984], 1244). [6]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 41. [7]Charles R. Erdman, *The Epistle of Paul to the Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1983), 89. [8]Harrell, 97. [9]Erdman, 90. [10]இன்றைய நாட்களில் சிலர், ஒருவர் இரட்சிக்கப்படுவதற்குத் தாம் எதையும்

*செய்யத் தேவையில்லை என்று முடிவு செய்யும் அளவுக்குத் தேவனுடைய கிருபையை வலியுறுத்தியிருக்கின்றனர்.*

[11]Erdman, 90. [12]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 81. [13]Vine, 314. [14]Bromiley, 156. [15]*Analytical Greek Lexicon*, 18, 263. [16]Ralph P. Martin, *The Epistle of Paul to the Philippians,* rev. ed., Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 118. [17]Vine, 526. [18]*Analytical Greek Lexicon,* 19, 274. [19]*"என் சிறு வெளிச்சம்" என்பது அமெரிக்கா மற்றும் பிற இடங்களில் குழந்தைகளால் பாடப்படும் ஒரு பாடலாக உள்ளது. மத்தேயு 5:14-16 மற்றும் பிற வசனப்பகுதிகள், தேவனை மகிமைப்படுத்துவதற்கு நாம் சுடர்களாகப் பிரகாசிக்க வேண்டியதன் அவசியம் பற்றிப் பேசுகின்றன.* [20]NASB *வேதாகமத்தில் "பிடித்துக்கொண்டு" என்பதற்குப் பின்வரும் குறிப்பு உள்ளது: "அல்லது முன்சென்று."* KJV *மற்றும்* ASV *ஆகிய வேதாகமங்கள் உட்படப் பல மொழிபெயர்ப்புகளில் "பிடித்துக்கொண்டு" என்பதற்குப் பதில் "முன்சென்று" என்றே உள்ளது.*

[21]Harrell, 100. [22]Martin, 122-23. [23]Harrell, 101. [24]Erdman, 93.